விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 18 சனிக்கிழமை (04.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 350

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## திடீர் மின்சாரத் தடையால்
# நாடு முழுவதும் இருளில் மூழ்கியது
### பொதுமக்கள் கடும் அசௌகரியம்

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று திடீர் மின் விநியோகத் தடை ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

மின் விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறே மின்சார விநியோகம் தடைப்பட்டமைக்கான காரணம் என மின்சக்தி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் நாட்களில் சுழற்சிமுறையில் மின்வெட்டு
### திங்கள் வழமைக்குத் திரும்பும் என நம்பிக்கை

(கொழும்பு)

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் இயந்திரம் மற்றும் கொதிகலன் செயலிழந்துள்ள நிலையில் அதனை 15

## நாசகார செயலாக இருக்கலாம்
### மின்சார சபை சந்தேகம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள மின்சாரத் தடையானது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள மின்சார பொறியியலாளர் தொழிற்சங்கங்க 15

# இலங்கைக்குள்ளும் நுழைந்தது “ஒமிக்ரோன்” திரிபு

### முதல் தொற்றாளர் அடையாளம்; தயார் நிலையில் சுகாதாரத் தரப்பு



(கொழும்பு)

இலங்கையிலும் “ஒமிக்ரோன்” வைரஸ் தொற்றுடன் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். நைஜீரியாவிலிருந்து நாடு திரும்பிய இலங்கையருக்கே இவ்வாறு தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனையடுத்து “ஒமிக்ரோன்” திரிபு வைரஸை தடுக்க சுகாதாரத் தரப்பு தயார் நிலையில் உள்ளது.

இலங்கையில் “ஒமிக்ரோன்” தொற்று பரவியது தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 24 ஆம் திகதி நைஜீரியாவில் இருந்து இலங்கை வந்து மாரவில பிரதேசத்தில் வசித்துவரும் இலங்கையைச் சேர்ந்த யுவதி ஒருவருக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

“நைஜீரியாவில் இருந்து வந்த 25 வயதுடைய பெண் ஒருவரே தொற்றுக்குள்ளாகியுள்ளார். தொற்றாளர் தற்போது அவரின் வசிப்பிட பிரதேசத்தில் உள்ளார். குறித்த யுவதி தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட பின்னர் கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்தில் சிகிச்சை பெற்றிருந்தார். குறித்த காலப்பகுதியில் அவர் தனியான அறையொன்றில் வைக்கப்பட்டுள்ளார். அவ்விடத்தில் 15

## கொரோனா +725

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 725 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் 15

## கொரோனா 20 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாவுக்கு மேலும் 20 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த 15

## நபிகளை இழிவுபடுத்தியதாகத் தெரிவித்து பாகிஸ்தானில் இலங்கையர் அடித்துப் படுகொலை
### சடலம் நடுவீதியில் வைத்து எரிப்பு
### நூற்றுக் கணக்கானவர்கள் வெறிச்செயல்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிலுள்ள தொழிற்சாலையொன்றில் மேலாளராகப் பணியாற்றிவந்த இலங்கையர், நூற்றுக்கணக்கான தொழிலாளர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். அவரது உடல் வீதியில் எரிக்கப்பட் 15

## திருநெல்வேலி, கோப்பாய், புதுக்குடியிருப்பு, வவுனியாவில்
### எரிவாயு அடுப்புகள் வெடித்தன

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி, கோப்பாய், புதுக்குடியிருப்பு, வவுனியா ஆகிய இடங்களில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

யாழ். திருநெல்வேலி, முருகன் வீதி 15

## வட மாகாண பாடசாலைகள் இன்று நடைபெறும்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் சீரற்ற காலநிலை காரணமாக நடைபெறாத 15

## கூட்டமைப்பு, முன்னணி சபையிலிருந்து வெளிநடப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உறுப்பினர்கள் சபையில் இருந்து நேற்று வெளிநடப்பு செய்தனர்.

பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக் 15

## மிருசுவிலில் ரயிலுடன் பட்டா வாகனம் விபத்து
### இளம் குடும்பஸ்தர் பலி



(சாவகச்சேரி)

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் விடுமுறை நீடிப்பு

(கொழும்பு)

அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக் கான டிசம்பர் மாதம் வழங்கப் படவுள்ள விடுமுறையில் மாற் றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 2022ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி வரை விடுமுறையை நீடிக்கக் கல்வியமைச்சு தீர்மானித்துள் ளது.

முன்னதாக எதிர் வரும் 23ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை பாடசாலை களுக்கு விடுமுறை வழங்க கல்வியமைச் சினால் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே தற்போது குறித்த தீர்மானத்தில் திருத்தம் மேற்கொளளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள் ளது.

அதன்படி, 2022ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் திகதி பாட சாலைகள் மீண்டும் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது. (ம-3)

மோட்டார் சைக்கிள் தேவை

China Lancer
மோட்டார் சைக்கிள் தேவை. (8877)

077 623 7956

# மின்சாரத் தடையால் ரயில் சேவைகள் பாதிப்பு

மின்சாரத் தடை காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலை யத்தில் இருந்து புறப்படும் ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட் டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

மின்சாரத் தடை காரணமாக ரயில் சமிக்ஞைகளில் ஏற்பட்டுள்ள செயலிழப்பு காரணமாகவே குறித்த ரயில் சேவைகளில் தாம தம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நடேஸ்வர அன்னையின் கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **உமா சிவகுமார்** அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் கார்த்திகேசு தம்பிராசா



அவர்கள் காலமான செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**பாடசாலைச் சமூகம்,**
**யா/நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை.**

(8891)

## அகவை அறுபதில் ஆசானுக்கோர் வாழ்த்து

செல்வி

### தனலக்சுமி புண்ணியமூர்த்தி



பொருளியலைக் கற்க வந்தோம்
போராட்டங்கள் மத்தியிலே

கனிவுடனே கண்டிப்பும்
கலைபயின்ற எமக்களித்து

ஏற்றமது பெற்றிடவே
ஏணியாய் நின்றிட்ட

*எமது பொருளியல் ஆசிரியைக்கு அறுபதாவது அகவைதின வாழ்த்துக்கள்.*

*வாழ்த்துவோர்:-*
**விஜயகுமாரி, வதனா, யமுனா**
**1996 கலைப்பிரிவு,**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.**

(8899)

## மரண அறிவித்தல்



# சிவசுப்பிரமணியம் புஸ்பகரன்

**தோற்றம் :- 22.10.1965** **மறைவு :- 23.11.2021**

கிளிநொச்சி வட்டக்கச்சியைப் பிறப்பிடமாகவும் இத்தாலி Biellaவை வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் புஸ்பகரன் அவர்கள் கடந்த 23.11.2021 செவ்வாய்க்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் முல்லைத்தீவு உடை யார்கட்டைச் சேர்ந்த பொன்னம்பலம் - விஜயலெட்சுமி தம்பதி களின் அன்பு மருமகனும் பொன்மலர் (மாலா - இத்தாலி) அவர் களின் ஆருயிர்க் கணவரும் மிதுஷா, சிதுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரன் (தயா - லண்டன்), சோதீஸ்வரி (ஜெயந்தி - லண்டன்), சிவனேஸ்வரி (சாந்தி - லண்டன்), காலஞ் சென்ற திலகேஸ்வரி (வசந்தி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சதாம்பிகை (சசி - லண்டன்), சண்முகலிங்கம் (சக்தி - லண்டன்), பிறேம்குமார் (பிறேம் - லண்டன்), பொன்மதி (மதி - லண்டன்), தயாபரன் (தயா - இலங்கை), சர்மிளா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் யோசப் கென்றி (லண்டன்), சிறிரூபன் (இலங்கை), ஜசிதா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகலனும் திவாகரன், ஜாபேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தப் பாவும் தர்ஷா, பிராந்தகன், சையிந்தவி மற்றும் தீசிதன் (இலங்கை) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் சுலக்ஷன், அனுஷன், தனுஜா, வினுஜா, அபிஜா (லண்டன்), யாசகன் (இலங்கை) ஆகி யோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (05.12.2021) ஞாயிற்றுக் கிழமை இத்தாலியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லக்சுமி அக்கடமி,
சுதந்திரபுரம் சந்தி, உடையார்கட்டு.

(8887) 077 774 3160

தகவல்:
வ.பொன்னம்பலம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டை இரண்டாக்க எத்தனித்த மாவீரரை நினைவுகூருவதை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



**(கொழும்பு)**

**ஜே.வி.பியின் நினைவு நாளும் விடுதலைப் புலிகளின் நினைவுநாளும் ஒன்றல்ல. ஒரு நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்த எத்தனித்த மாவீரர் நினைவுநாளை அரசாங்கம் தடை செய்யவேண்டும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2 ஆயிரத்து 500 விடுதலைப் புலிகள் 75 ஆயிரம் இந்திய இராணுவத்தையே தோற்கடித்தார்கள். "யுத்தம் இல்லாத இந்த சூழ்நிலையில், இராணுவத்திற்கு ஏன் அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என சிலர் கேள்வியெழுப்புகின்றனர். ஆனால் ஒரு நாட்டில் யுத்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இராணுவக் கட்டமைப்பு பலமானதாக இருக்க வேண்டும்.

80 களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் 2 ஆயிரத்து 500 பேரளவிலேயே இருந்தார்கள். 75 ஆயிரம் இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வந்தனர். ஆனால், விடுதலைப்புலிகள் அவ்வளவு குறைவான ஆட்களை வைத்து இந்திய இராணுவத்தையே தோற்கடித்தார்கள். இதுதொடர்பாக இலங்கையர் என்று நாம் பெருமையாகக்கூட கருத முடியும்.

90 களில் எமது இராணுவத்தில் 70 ஆயிரம் இராணுவத்தினரே இருந்தார்கள். இராணுவம் ஆட்பலத்தில் பலவீனமாக இருந்த காரணத்தினால்தான் யுத்தம் நீடித்தது. அன்று எமக்கு 90 ஆயிரம் இராணுவத்தினர் இருந்திருந்தால், அன்றே யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்திருக்கலாம்.

இன்று நான் மாவீரர் நினைவு தொடர்பாக ஒரு கருத்தைக் கூறியே ஆகவேண்டும். இதனைக் கட்டாயமாக நாட்டில் தடைசெய்தே ஆக வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மற்றும் எமது கட்சியின் நிலைப்பாடும் இதுவே. இவர்களின் அனுமதியுடன்தான் நான் இந்தக் கருத்தை முன்வைக்கிறேன்.

மாவீரர் நினைவு நாளை நாம் தடை செய்தே ஆக வேண்டும். இதுதொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் தீவிரமான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். இதற்கான அதிகாரம் அவருக்குள்ளது. எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைத்தே ஆக வேண்டும்.

யுத்தத்தின்போது உயிரிழந்தவர் களை நினைவுகூருவது எமக்கு பிரச்சினையல்ல. ஆனால், அதற்காக பிரபாகரனின் பிறந்த நாளை தெரிவு செய்வதுதான் பிரச்சினைக்குரியதாகும்.

பிரபாகரனை அவரது உறவினர்கள் நினைவுகூரட்டும். விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது தடை செய்யப்பட்ட அமைப்பாகும். எனவே, இதன் உறுப்பினர்களை நினைவுகூருவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

மாவீரர் நினைவு நாளும், ஜே.வி.பியின் நினைவு நாளும் சமமானது கிடையாது. ஜே.வி.பி. இந்நாட்டின் அரசியல் கிளர்ச்சியொன்றை மேற்கொள்ளவே முற்பட்டார்கள். இதற்காக ஆயுதம் ஏந்திய காரணத்தினால் தான் அரசாங்கம் அவர்களைக் கட்டுப்படுத்தியது.

மாறாக, விடுதலைப் புலிகள் போன்று ஒரு நாட்டை இரண்டாக பிளவடைய வைக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணம் கிடையாது. இன்று கூட விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் வெளிநாடுகளில் இருந்துகொண்டு புலிக்கொடியுடன் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கிறார்கள். தங்களின் நோக்கத்திற்காக இன்னமும் வெளிநாடுகளில் இருந்து செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கி றார்கள்.

நாம் வடக்கு அரசியல்வாதிகளுடன் மிகவும் நட்பாக இருக்கிறோம். அவர்களுக்கும் எமக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

ஆனால், ஒரு சில வடக்கு அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் நோக்கத்திற்காகவே, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இதன் மூலம் மீண்டும் தெற்கு மக்கள் மனங்களில் கோபத்தை விதைக்கவே இவர்கள் முற்படுகிறார்கள். இதனைச் செய்ய வேண்டாம் என நான் கேட்டுக் கொள்கிறேன்.


ராஜீவ் காந்தி, ரணசிங்க பிரேமதாஸ, ரஞ்சன் விஜயரத்ன போன்ற அரசியல் தலைவர்களை கொன்றவர்களை, தேரர்களை பேருந்தில் வைத்து படுகொலை செய்தவர்களை, தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தியவர்களை, ஸ்ரீமா போதி மீது தாக்குதல் நடத்தியவர்களை, காத்தான்குடி பள்ளியில் முஸ்லிம்களை கொலை செய்தவர்களை, அமிர்தலிங்கத்தை கொலை செய்தவர்களை, கிராமங்களுக்குள் புகுந்து பொது மக்களை கொலை செய்தவர்களையே மாவீரர் தினத்தின் ஊடாக நினைவுகூர முற்படுகிறார்கள்.

இவ்வாறானவர்களை நினைவுகூர அனுமதிக்கும் அள வுக்கு நாம் கீழ்மட்டத்துக்கு செல்லவில்லை. அத்தோடு, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை நாம் முழுமையாக வரவேற்கிறோம்.

அப்படியாயின், என்னைக் கொலை செய்ய குண்டுகளைக் கொண்டு வந்த மொரிஸ் என்பவரை முதலில் விடுதலை செய்ய வேண்டும் என நான் அரசாங்கத்திடம் இவ்வேளையில் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# ஆபத்துக்களைத் தவிர்க்க மக்களுக்கான அறிவுரைகள்

## வெடிப்புச் சம்பவங்களை ஆராயும் குழு



1.நீங்கள் சந்தையில் இருந்து ஒரு எரிவாயு சிலிண்டரை வாங்கும் போது, அந்த சிலிண்டரில் இருந்து எரிவாயு கசிவு ஏதும் இல்லை என்பதை விற்பனை முகவரிடமிருந்து உறுதிப்படுத்திய பின்னர் வாங்குங்கள்.

2.எரிவாயு சிலிண்டரில் எரிவாயு கசிவை நீங்கள் கவனித்தால், அல்லது சந்தேகம் இருந்தால், வீட்டிலிருந்து அகற்றி, சரியான காற்றோட்டத்துடன் திறந்த இடத்தில் வைக்கவும்.

3.பிறகு உங்கள் எரிவாயு முகவரிடமும், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கும் தகவல் வழங்குங்கள்.

4.எரிவாயு சிலிண்டர்களில் நிபுணத்துவம் பெற்ற ஒருவரால் சோதிக்கப்படும் வரை அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படாத சோதனைகளை மேற்கொள்ள வேண்டாம். ஆபத்தில் இருக்கும் தொகுதிகளின் தேவையற்ற ஆய்வுகளைத் தவிர்க்கவும்.

5.விபத்துக்களைக் குறைப்பதற்கான விரைவான நடவடிக்கையாக, உங்கள் எரிவாயு சிலிண்டரில் உள்ள ரெகுலேட்டர், எரிவாயு விநியோகக் குழாய், எரிவாயு அடுப்பு இணைப்புக்கள் சரியாக இயங்குவதையும், எரிவாயு ஸ்டவ் சரியாக பொருத்தப்பட்டிருப்பதையும் உறுதி செய்து கொள்ளவும். பழுதடைந்த எரிவாயு அடுப்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.

6.இலங்கையின் தரநிலை நிறுவனத்தால் செய்யப்பட்ட பரிந்துரையின்படி, 51.5 ~ 1180 ரெகுலேட்டர்கள் மற்றும் 51-5 - 1172 எரிவாயு விநியோகக்குழாய் மற்றும் பாகங்களை பயன்படுத்துங்கள்.

ஒரு ரெகுலேட்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட ஆயுட்காலம் 05 ஆண்டுகள் மற்றும் எரிவாயு விநியோகக் குழாய்க்கு பரிந்துரைக்கப்பட்ட ஆயுட்காலம் 02 ஆண்டுகள் ஆகும்.

7.பணியிடங்கள் மற்றும் சிறிய தொழிற்சாலைகளில் எரிவாயுவைப் பயன்படுத்தும் போது, பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநரின் ஆலோசனையைப் பெறவும் மற்றும் பொருத்தமான சுற்றுப்புற வெப்பநிலைக்கு இணங்கக்கூடிய துணைப் பொருட்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்யவும்.

8.வாயு கசிவு குறித்து எச்சரிக்கையாக இருங்கள். சிலிண்டரிலிருந்து வித்தியாசமான வாசனை வருகிறதா? என்பதில் அவதானமாக இருங்கள்.

9.இந்த ஆண்டு ஏற்பட்ட விபத்துக்களில் அதிகமானவை அடுப்பின் கண்ணாடி உடைந்தது தொடர்பானவையே.

10.அடுப்பு பாவனை முடிந்ததும், ரெகுலேட்டரை அகற்றாமல், அடுப்பிற்கான எரிவாயு விநியோகத்தை நிறுத்தும் ஆளியை திருப்பி, எரிவாயு விநியோகத்தை நிறுத்துங்கள்.

11.சமையலறையில் எரிவாயு அடுப்பை இயக்க ஆரம்பிப்பதற்முன்னர் கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் திறந்து விடுங்கள். மேலும், எரிவாயு விநியோகத்திற்கு முன், அருகில் உள்ள மின் இணைப்பு, மொபைல் போன்கள் போன்றவற்றைத் தவிர்த்து விடுங்கள். (நி)

# எரிவாயு விநியோகத்தை இடைநிறுத்த உத்தரவு

(கொழும்பு)

எரிவாயுக் கசிவைக் கண்டறியும் மணத்தை உருவாக்கும் இரசாயனப் பதார்த்தம், உரிய அளவில் இல்லாதமை காரணமாகவே, எரிவாயு விநியோகம் மற்றும் விற்பனையை இடைநிறுத்துமாறு அறிவித்ததாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

எரிவாயுக் கசிவைக் கண்டறியும் மணத்தை உருவாக்கும் எதில் மெகப்டன் (Ethyl Mercaptan), கொள்கலனில் 14 அலகுகளாக இருக்கவேண்டிய நிலையில், அது தற்போது 5 அலகுகளாக உள்ளதென அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள கப்பலிலிருந்து எரிவாயு மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

உள்ளூர் தர நியமங்களுக்கு அமைய பொருந்துமாயின் மட்டுமே, அதனைத் தரையிறக்க அனுமதிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். (நி)

# ஒமிக்ரோன்

## டெல்டா, பீட்டாவை விட 3 மடங்கு வேகம் கொண்டது

(கொழும்பு)

ஒமிக்ரோன் திரிபு தொடர்பில் அடுத்த இரண்டு, மூன்று வாரங்களில் தெளிவான கருத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நீலிகா மளவிகே தெரிவித்தார்.

எந்தத் திரிபு கண்டறியப்பட்டாலும், சுகாதார வழிகாட்டல் கோவையைப் பின்பற்றுவது முக்கியமானதாகும் என ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தென்னாபிரிக்காவில் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்ட கொவிட் திரிபு டெல்டா மற்றும் பீட்டா திரிபுகளை விடவும் 3 மடங்கு அதிகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் கொவிட் தரவுகளை ஆய்வுக்கு உட்படுத்தியதன் பின்னர் அந்நாட்டு விஞ்ஞானிகள் இதனைத் தெரிவித்தனர் என நீலிகா தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபுதாபி அணியை வீழ்த்தியது டெல்லி புல்ஸ் அணி



ரி-10 தொடரின் 30 ஆவது லீக் போட்டியில், டெல்லி புல்ஸ் அணி 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில்; டெல்லி புல்ஸ் அணியும் அபுதாபி அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அபுதாபி அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி புல்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 135 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, குர்பாஸ் 69 ஓட்டங்களையும் செரபேன் ருத்தர்போர்ட் 52 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அபுதாபி அணியின் பந்துவீச்சில், கொட்ரேல், லிவிங்ஸ்டோன் மற்றும் நவீன் உல் ஹக் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 136 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அபுதாபி அணியால், நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 86 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், டெல்லி புல்ஸ் அணி 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லியாம் லிவிங்ஸ்டோன் 29 ஓட்டங்களையும் பிலிப் சோல்ட் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டெல்லி புல்ஸ் அணியின் பந்துவீச்சில், அடில் ராஷித் மற்றும் டோமினிக் ட்ரேக்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் சந்தரபோல் எம்ராஜ் மற்றும் ஷிராஸ் அஹமட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 29 பந்துகளில் 6 சிக்ஸர்கள் 5 பவுண்ரிகள் அடங்களாக ஆட்ட மிழக்காது 69 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ரஹமனுல்லா குர்பாஸ் தெரிவுசெய்யப்பட்டார். (4-6)

# பங்களா டைகர்ஸ் அணி 30 ஓட்டங்களால் வெற்றி




ரி-10 தொடரின் 29 ஆவது லீக் போட்டியில், பங்களா டைகர்ஸ் அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

அபுதாபியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், பங்களா டைகர்ஸ் அணியும் நோதர்ன் வோரியஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நோதர்ன் வோரியஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களா டைகர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில், 1 விக்கெட் இழப்புக்கு 119 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து 120 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நோதர்ன் வோரியஸ் அணியால், 10 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 89 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் பங்களா டைகர்ஸ் அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 31 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 3 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஹஸ்ரதுல்லா சஷாய் தெரிவுசெய்யப்பட்டார். (4)

# மரண அறிவித்தல்



## நாகேஸ்வரி திருநாவுக்கரசு

**தோற்றம் - 22.09.1943** **மறைவு -03.12.2021**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் (கொட்டடி) கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி திருநாவுக்கரசு நேற்று (03.12.2021) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் வைத்திலிங்கம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் பொன்னம்பலம் - மீனாட்சி தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் திருநாவுக்கரசின் அன்பு மனைவியும் சுப்பிரமணியத்தின் (மணியம்) அன்புச் சகோதரியும் சிவகுமார் (ஜேர்மனி), நிர்மலா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சோபனாதேவி, காலஞ்சென்ற புவனரெட்னம் ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்சீவன், பார்த்திபன், கோபிநாத், தினேகன், தனுசன், சஜிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஜயின் அன்புப் பூட்டியும் ஸ்ரீ ரங்ககுமாரியின் (குஞ்சு) மைத்துனியும் லோகேஸ்வரி, கதிர்காமநாதன், தவராணி, ரங்கேஸ்வரி, காலஞ்சென்ற வசந்தி, பாலமோகன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2021) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.58/8,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (C-3159)

தகவல்:
தி.சிவகுமார் (மகன்)
தொ.இல - 021 222 0160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உங்களால் பெருமை கொள்கின்றோம்

Business World International Organization

BWIO

## BUSINESS WORLD INTERNATIONAL AWARDS

Wrold's Topmost Company Certification & Corporate Awards
(A Celebration of Leadership, Talent, Success & Achievement)







BWIOன் 2021ம் ஆண்டுக்கான Business World International Awards விழாவில் வளர்ந்து வரும் வர்த்தக நிறுவனம் (Emrging Company of the Year) என்ற நட்சத்திரத்தோடு விருதை வென்றுள்ளோம்.

இந்த சாதனை வாடிக்கையாளர்களாகிய உங்களாலேயே சாத்தியமானது என்பதை நன்றியோடு தெரிவிக்கின்றோம்.

Yarl Smart Water Solution (Pvt) Ltd. நிறுவனத்தின் இடையறாத சேவைகளுக்கும் வெற்றிகளுக்கும் எப்போதும் உடன் உழைக்கும் எமது ஊழியர்கள், உறவினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் இந்த விருதைச் சமர்ப்பிக்கின்றோம். பன்முகப் படுத்தப்பட்ட எமது சேவைகள் மக்களின் தேவைகளைப்பூர்த்தி செய்யும்வகையில் முன்னெடுத்துச் செல்ல தொடர்ந்தும் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

நீர் தொடர்பான அத்தனை பிரச்சனைகளுக்கும் ஒரேகூரையின் கீழ் தீர்வு பெற......

**YARL SMART**
*Water Solution (Pvt) Ltd*

No.341 K.K.S Road, Jaffna.
021 430 0044,
076 666 5267
yarlsmartwater@gmail.com
www.yarlsmartwater.com

(c-3152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா அமைக்கும் வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துங்கள்

## சாவ.நகரசபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினர் நகர எல்லைக்குள் சிறுவர் பூங்கா அமைக்கும் செயற்பாட்டினை துரிதப்படுத்த வேண்டும் என நகர சபை உறுப்பினர் ம.நடனதேவன் வலியுறுத்தினார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நகரசபையில் இடம் பெற்ற வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பு அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகரசபையினர் சிறுவர் பூங்கா அமைப்பதுடன்,பொது விளையாட்டு மைதானத்தையும் சீர் செய்ய வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

அந்தவகையில் சிறுவர் பூங்காவிற்கான காணி நகர சபையால் கொள்வனவு செய்யப்பட்டு,காணி எல்லைப்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

குறித்த செயற்பாட்டினை துரிதப்படுத்தி எமது சபை காலத்திற்குள் சிறுவர் பூங்கா அமைக்கப்பட வேண்டும்.

கொரோனா காலத்தில் பல சிறார்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

இம் மாதத்திற்குள் சிறுவர் பூங்கா அமைப்பது தொடர்பான குழு ஒன்றை நியமித்து உடனடியாக வேலைத்திட் டத்தை ஆரம்பிக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4)


# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம் இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்தும் 17 ஆவது இரத்ததான முகாம் நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 முதல் மாலை 3.30 மணி வரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து குருதிக்கொடையாளர்களையும் உரிய சுகாதார முறைப்படி கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது. (4)

# பாடசாலைக்குள் வெள்ளம் மாணவர் வருகை குறைவு



(சாவகச்சேரி)

கொடிகாமம் போக்கட்டி அ.த.க பாடசாலை வளாகத்திற்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பாடசாலைக்கு வரும் மாணவர் தொகை வெகுவாகக் குறைவடைந்திருப்பதாக பாடசாலைச் சமூகம் சுட்டிக் காட்டியுள்ளது. இம்முறை மழை வெள்ளம் காரணமாக தென்மராட்சி பிரதேசத்தின் கொடிகாமம் பகுதி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30)

# குருபூசை தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும் சைவப் பெருவள்ளலாருமான சேர்.பொன். இராமநாதனின் 91ஆவது குருபூசை தின நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெறவுள்ளது. (4)

# திருமறைக் கலாமன்றத்தின் இணையவழி ஆய்வரங்கம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் பன்முகப்படுத்தப்பட்ட பணிகளை ஆவணப்படுத்தும் முகமாக "கலைத்தூது நீ.மரிய சேவியர் அடிகள்: ஒரு பன்முகப் பார்வை" என்னும் தலைப்பில் மெய்நிகர் வழியில் சூம் செயலிக்கூடாக திருமறைக் கலாமன்றம் மாதந்தோறும் நடத்தி வருகின்ற ஆய்வரங்கத் தொடரின் ஏழாவது நிகழ்வு நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் "தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மரியசேவியர் அடிகள் "என்னும் தலைப்பில் எழுத்தாளரும், யாழ்,தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் தமிழ் ஆசிரியருமான சி.ரமேஷ் ஆய்வினை வழங்கவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரும் சூம் செயலி இலக்கம் 78936 44809,கடவுச் சொல் cpa என்பதற்கூடாக இந்நிகழ்வில் இணைந்து கொள்ளமுடியும். (4)

# கணபதி ஹோமமும் கஜமுகாசூரன் போரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 இற்கு கணபதி ஹோமமும், 8 ஆம்திகதி மாலை 4.30இற்கு கஜமுகாசூரன் போரும் நடை பெறும் என ஆலய பிரதம குரு அறிவித்துள்ளார். (4)



இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் His Excellency Ambassador Holger Seubert யாழ். போதனா மருத்துவமனைக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

மருத்துவமனையில் பயன்படுத்தப்படும் ஜேர்மன் தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட எந்திரங்களையும் கருவிகளையும் பார்வையிட்டதோடு மருத்துவமனையின் சேவைகள், தேவைகள் பற்றியும் கேட்டறிந்தார். (படம்:-சிவசாந்தன்)

# வீதி விதியை மீறினால் உடன் கைது

## நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி

(கரணவாய்)

பொது மக்களின் பாதுகாப்பை மேலும் உறுதி செய்வதற்காக நெல்லியடி நகர் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர தெரிவித்தார்.

அந்த வகையில் வீதி விதிகளை கடைப்பிடிக்காது செல்வோர் உடனடியாக கைது செய்யப்படுவீர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதிகரித்துள்ள வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தவே இவ் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (4-60)





# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்:அத்தம்
கி.பா:26 செவ் 2 சூரி 8 இல்
உயரம்:165cm
தகைமை/தொழில்: HND Civil Engineering, தொழில்நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: B/12026

பிறப்பு:1986 இந்து நட்சத்திரம்:உத்தராடம்
கி.பா: - செவ் 7 சூரி 4 இல்
உயரம்: 180 cm
தகைமை/தொழில்:Assistant Engineer Londan
எதிர்பார்ப்பு:படித்த அழகிய பெண்
தொ.இ: B/12027

பிறப்பு:1989 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா:15 செவ் 9 சூரி 7 இல்
உயரம்:172cm
தகைமை/தொழில்: MSC,BA ஆசிரியர் (GOV)
எதிர்பார்ப்பு:வேலை பார்க்கும் பெண்
தொ.இ: B/12029

பிறப்பு:1994 இந்து நட்சத்திரம்:சதயம்
கி.பா: - செவ் 11சூரி1இல்
உயரம்: 6
தகைமை/தொழில்:Capital Media (தனியார்)
எதிர்பார்ப்பு:கனடா தவிர்ந்த வெளிநாடு மட்டும்
தொ.இ: B/12032

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா: 56 ½ செவ் 2சூரி1 இல்
உயரம்:5"5"
தகைமை/தொழில்:. B.Sc உதவி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:Civil Engineer மட்டும்
தொ.இ:G/12028

பிறப்பு:1996இந்து நட்சத்திரம்:பூசம்
கி.பா:35 செவ் 2 சூரி4 இல்
உயரம்:5"2"
தகைமை/தொழில்:A/L.கணக்காளர்
எதிர்பார்ப்பு:உள்நாடு, வெளிநாடு
தொ.இ:G/12030

பிறப்பு:1990இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா:29 செவ்8 சூரி2 இல்
உயரம்:5"5"
தகைமை/தொழில்:B.Sc, Senior Software Engineer (Colombo)
எதிர்பார்ப்பு:தகுந்தவரன்
தொ.இ:G/12031

பிறப்பு: 1997இந்து நட்சத்திரம்:சுவாதி
கி.பா:24 செவ் 2 சூரி9 இல்
உயரம்:5"2"
தகைமை/தொழில்: விஞ்ஞான பட்டதாரி
எதிர்பார்ப்பு:உள்நாடு பட்டதாரி, வெளிநாடு லண்டன், கனடா
தொ.இ:G/12033

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முழு நாடும் இருளில் மூழ்கும்

## மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**மின் உற்பத்தி நிலையங்களில் சேவையாற்றும் பொறியியலாளர்கள் கடமையில் இருந்து விலகிக் கொள்ளவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**



ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தாலும் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் நடவடிக்கை கட்டமைப்புகளில் சேவையாற்றும் பொறியியலாளர்கள் நேரடி அட்டவணைக்கு அமைய கடமையாற்றுகின்றனர்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக அவர்களை கடமைகளில் இருந்து விலகிக்கொள்ள உள்ளதாக பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை படிப்படியாக தீவிரப்படுத்தப்படுவதுடன் இறுதியில் பணிப்புறக்கணிப்பு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டால், முழு நாடும் இருளில் மூழ்கும் எனவும் குமாரவடு குறிப்பிட்டார். (ஙி)

# வடக்கில் சூரிய மின் நிலையங்களை அமைக்க இந்தியா முன்வர வேண்டும்

## மனோ எம்.பி.

(கொழும்பு)

வடக்கு தீவுகளில் சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன்வர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள தீவுகளில் முன்னெடுக்கவிருந்த மின் உற்பத்தித் திட்டங்களை சீன நிறுவனம் இடைநிறுத்தியுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த விடயம் குறித்து தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள மனோ கணேசன், "வடக்கு தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இருந்த சீனத் திட்டம், இந்தியாவின் பாதுகாப்பு ஆட்சேபனை காரணமாக இடை நிறுத்தப்பட்டு விட்டது.

ஆனால், அதற்குப் பதிலாக அதே மின் உற்பத்தி கட்டமைப்பை மாலைதீவின் 12 ஆளில்லாத் தீவுகளில் முன்னெடுக்க அந்நாட்டு அரசுடன் சீனா உடன்பாடும் கண்டுள்ளது.

இந்த நிலையில், அதே போல் அதற்கு பதிலாக வடக்கு தீவுகளில் மறு விளைவு இல்லாத சுத்தமான சூரிய சக்தி மின் நிலையங்களை அமைக்க இந்தியா உடனடியாக முன்வர வேண்டும்.

ஏனெனில் இந்த இந்தியா-இலங்கை- சீனா கயிறு இழுப்புகளுக்கு மத்தியில் நம் நாட்டுக்கு, சுத்தமான மின்சாரம் தேவை" என அவர் தெரிவித்தார். (ஙி)


## விற்பனைக்கு

**யாழ். நகரப் பகுதியில் கடைகள், காணிகள், வீடுகள் விற்கவும் வாங்கவும் முடியும்.**

யாழ். ஸ்ரான்லி வீதியில் 1½ பரப்புக்காணி, யா/ சத்திரச்சந்தியில் 3 பரப்புக்காணி, நல்லூர் செட்டித்தெருவில் 2 பரப்புக் காணிக்குள் (வீடு, கடை, வாகனத் தரிப்பிடமும் உண்டு). திருநெல்வேலி சந்தியில் 2 கடைகள், கே.கே.எஸ்.வீதியில் மாடிக் கட்டடம், யாழ். ஸ்ரான்லி வீதியில் 5 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

மேலும் இலங்கையில் எப்பாகத்திலும் காணிகள் வாங்கவும் விற்கவும் எம்மால் முடியும்.

தொடர்பு: VIMB
**077 522 1132, 076 534 6562** (8888)



## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## FACULTY OF ALLIED HEALTH SCIENCES
### WALK -IN INTERVIEW
### Temporary Demonstrator in Pharmacy

Walk –in Interview for the post of Temporary Demonstrator in Pharmacy will be held on 14.12.2021 at 10.00 a.m in the Board room of the Faculty of Medicine, University of Jaffna.

**Qualifications:-**
A Degree in the relevant subject.

**Note**- Candidates who are awaiting for the results of the final examinations can also attend the interview.

**SALARY SCALE** –Rs.40,920/=p.m (fixed)
In addition to the above salary, allowances approved by University Grants Commission will also be paid.

Candidates are requested to appear with relevant certificates, National Identity Card and **self-prepared applications.**

**Registrar,**
**University of Jaffna.**

(C-3155)



## மரண அறிவித்தல்

### இரத்தினம் மகேந்திரன்



தோற்றம்: 22.12.1958
மறைவு: 26.11.2021

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும் மானிப்பாய் சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் மகேந்திரன் 26.11.2021 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் பொன்னம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற நாகராசா கண்மணிதேவியின் மூத்த மருமகனும் விஜயகுமாரி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும், நிரோஷன், விதூஷன், மதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதுராவின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சிவயோகநாதன், இரத்தினமலர் மற்றும் கமலநாதன், கணேசநாதன், சண்முகநாத முதலி, சிறீபத்மநாதன், நல்லநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01.12.2021 புதன்கிழமை சுவிஸில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அன்புச் சகோதரர்கள்
0041792620476- சுவிஸ்
(8882)



## அன்புள்ள அப்பாவுக்கு...

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 12 | 14 |
| 07 | 12 |
| 1934 | 2020 |



(திதி: 04.12.2021)

### அமரர். செல்லையா தர்மகிருஸ்ணர்

**(கண்ணன் அச்சக உரிமையாளர்)**

அன்புடனும் பண்புடனும் அறிவுரைகள் கூறி எமை
அரவணைத்து வளர்த்த அப்பாவே
அவசரமாய் எம்மைவிட்டு அரனடி அடைந்து
ஆண்டு ஒன்று ஆகிவிட்டதப்பா...
ஆனாலும் உங்கள் நினைவு எமை விட்டகலவில்லை
என்றென்றும் மறவோம் மறவோம் அப்பா...
நல்லைக்கந்தன் பாதமதில் உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்லூர். (C-3153)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

04.12.2021
கார்த்திகை 18, சனிக்கிழமை
அமாவாசை பிற்பகல் 2.03 மணிவரை
அனுசம் முற்பகல் 11.50 மணிவரை
சுபநேரம் 3.15-4.45 மணிவரை
இராகுகாலம் 9.15-10.45 மணிவரை
சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை
அமாவாசை விரதம்

வளவன்


மேஷம்

குடும்பத்தில் குழப்பங்கள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோங்கும் நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பிரயாண பயமுண்டு.


ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மிதுனம்

சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வியாபார விருத்தியுண்டு.


கடகம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், மற்றவர்களின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


சிம்மம்

பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.


கன்னி

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பக்குவமாய் நடந்து பாராட்டுப் பெறும் நாள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.


விருச்சிகம்

முன்னேற்றம் கூடும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.


மகரம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பலரது அன்பிற்குப் பாத்திரமாவீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.


கும்பம்

வசதி வாய்ப்புக்களை பெருக்கி கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் அக்கறை பெருகும் நாள், தூர தேசத்து உறவினர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


மீனம்

எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

உலகத்திலேயே தலை சிறந்த ஆசிரியர் அனுபவம் தான்

# டெல்டாவை விட ஒமிக்ரோன் பாதிப்பு குறைவு

## எனவே அச்சம் தேவையில்லை என்கிறார் தென்னாபிரிக்க மருத்துவ சங்கத் தலைவி

(கேப்டவுண்)

**டெல்டா திரிபு வைரஸ் பாதிப்பை விட ஒமிக்ரோன் திரிபு பாதிப்பு குறைவாகவே உள்ளது. ஆரம்ப நிலையில் அவதானிக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்க மருத்துவ சங்கத்தின் தலைவி ஏஞ்சலிக் கோட்ஸி தெரிவித்தார்.**

எனவே, ஒமிக்ரோன் குறித்து தேவையற்ற பயம் கொள்ள தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதுவரை கொவிட் தடுப்பூசிகள் அனைத்து உரு திரிபுகளுக்கு எதிராகவும் பாதுகாப்பளிக்கின்றன. இளம் வயது மற்றும் இணை நோய்கள் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு லேசான அறிகுறிகள் தான் உள்ளது. தற்போது கண்டறியப்பட்டுள்ள ஒமிக்ரோனால் டெல்டா திரிபை விட ஆரம்ப கட்ட நிலையில் உள்ள பாதிப்பு குறைவாகத் தான் உள்ளது. ஆரம்ப கட்டத்தில் தான் உள்ளோம். இனி வரும் காலங்களில் இதன் வீரியம் பற்றி தெரியவரும்.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது

எனினும் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வாசனையின்மை சுவை இழப்பு, அல்லது கடுமையான காய்ச்சல் குறித்த அறிகுறிகளை அனுபவிப்பதற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. எனவே ஒமிக்ரோன் குறித்து தேவையின்றி அச்சப்படத் தேவையில்லை

இதேவேளை, ஒமிக்ரோன் உரு திரிபு வைரஸ் 50 உருமாற்றங்களை கொண்டுள்ளதால் அதி வேகமாக பரவக்கூடியதாக இருக்கலாம் என்று மருத்துவ விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இருப்பினும் இதனை அறிவியல் ரீதியாக இதுவரை உறுதி செய்ய முடியவில்லை. தொடர் ஆராய்ச்சி மூலம்தான் இது குறித்த முழுமையான உண்மைகளை உறுதி செய்ய முடியும்.

இந்நிலையில் புதிய திரிபு குறித்து உலக சுகாதார அமைப்பு மற்றும் பல்வேறு அமைப்புகளின் விஞ்ஞானிகள் தொடர் ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அயோத்தி "ராமர்" கோயிலுக்கு வெடிகுண்டு எச்சரிக்கை

(டில்லி)

இந்தியாவின் அயோத்தி ராமர் கோயிலை தாக்கப் போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டமையை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உத்தரபிரதேசம்-அயோத்தியில் பிரமாண்டமான அயோத்தி கோயில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.



இந்த நிலையில் பொலிஸாருக்கு வந்த அழைப்பு ஒன்றில், ராமர் கோயிலை தாக்கப்போவதாகவும் அயோத்தியில் தொடர் குண்டுகள் வெடிக்கும் என்றும் அச்சுறுத்தப்பட்டது. இதனையடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. (நி)

## நியூயோர்க் ஐ.நா. சபை முன்பு துப்பாக்கியால் மிரட்டல் விடுத்தவர் கைது

(நியூயோர்க்)

நியூயோர்க் ஐ.நா. சபை முன்பு தற்கொலை செய்து கொல்ல போவதாக மிரட்டல் விடுத்தவரால் 3 மணி நேரம் பரபரப்பும், பதட்டமும் நிலவியது.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா.சபை கட்டடம் முன்பு சுமார் 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் நேற்று திடீரென துப்பாக்கியுடன் வந்தார். அவர் பாதுகாப்பு அறை அருகே நின்று கொண்டு துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்யப்போவதாக மிரட்டல் விடுத்தார். இதையடுத்து தலைமை அலுவலகத்தின் வாசல்கள் அனைத்தும் மூடப்பட்டன. உள்ளே இருப்பவர்கள் பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

அந்த பகுதியில் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. பின்னர் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவரை மடக்கி பிடித்து கைது செய்தனர். அவரிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

அவர் எதற்காக இந்த செயலில் ஈடுபட்டார் என்பது தெரியவில்லை. இச்சம்பவத்தால் ஐ.நா. சபை அலுவலகம் முன்பு 3 மணி நேரம் பரபரப்பும், பதட்டமும் நிலவியது. (நி)

## பாலின மாற்று அறுவை சிகிச்சைக்கு கனடாவில் தடை

(ஒட்டாவா)

கனடாவில் பாலின மாற்று அறுவை சிகிச்சைக்கு தடை கோரும் சட்ட மூலம், கனடா பாராளுமன்றத்தின் கீழ்சபையில் (மக்கள் சபை) நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலம் அடுத்த கட்டமாக மேல் சபையான செனட் சபையின் ஒப்புதலைப் பெற வேண்டும். இந்த சட்ட மூலம், மேல் சபையிலும் நிறை வேறி சட்டமாகி விட்டால், கனடாவில் யாரும் பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியாது.

இந்த சட்ட சட்டமூலத்தை ஆளும் லிபரல் கட்சி மட்டுமல்லாது, எதிர்க்கட்சி யான கன்சர்வேடிவ் கட்சி யினரும் ஆதரித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கைதிகள் விடுதலை ஞானசார தேரரின் கூற்று உண்மை எனில்

# அதனை உடன் நிறைவேற்ற வேண்டும்

## அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்து

(நெளுக்குளம்)

**அண்மையில் வடக்கிற்கு விஜயம் செய்த ஒரே நாடு ஒரே சட்ட செயலணியின் தலைவர் ஞானசார தேரர் "அரசியல் கைதிகளை ஜனாதிபதி விடுதலை செய்வதாக கூறினார் "அது உண்மையெனில் உடனடியாக அதனைச் செய்ய வேண்டும். அரசியல் நோக்கம் கருதி காலம் தாழ்த்தாது ஜனாதிபதி முடிவெடுக்க வேண்டும்.**

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் தண்டனை காலத்தை விட விசாரணை என நீண்ட காலம் சிறையில் இருக்கின்றனர் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்தார். அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தொடரப்பட்டுள்ள அனைத்து வழக்குகளும் நிறைவுற சட்டமா அதிபர் திணைக்களமும், நீதிமன்றமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்ட அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் தண்டனை காலத்தை விட விசாரணை என நீண்ட காலம் சிறையில் இருந்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்திலும் உரையாடப்பட்டுள்ளது ஆதலால் இவர்களின் விடுதலை துரிதப்படுத்தப்பட வேண்டும். அது மட்டுமல்ல மனித உரிமை பறிக்கும், உயிர்களை பறிக்கும், மனித முக மற்ற கொடிய பயங்கரவாத தடை சட்டம் நீக்கப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார்.(4-299)

## இந்தியப் படகுகள் அத்துமீறல்; மன்னாரில் கையெழுத்து வேட்டை

(மன்னார்)

இந்திய இழுவைப்படகுகளின் அத்து மீறிய வருகைக்கு எதிராக ஒரு இலட்சம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை முதல் மன்னார் பஜார் பகுதியில் இடம் பெற்றது.


தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில்,கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை இடம் பெற்றது.

குறித்த கையெழுத்து அடங்கிய ஆவணம் ஜனாதிபதி ,சட்டமா அதிபர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் ஆகியோருக்கு கையளிக்கும் முகமாக பெற்றுக் கொள்ளப் பட்டது.

இதன் போது மன்னர் மாவட்ட மீனவர்கள் ,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு கையெழுத்துக்களைப்பதிவு செய்தனர்.

மன்னார் , முல்லைத்தீவு , யாழ்ப்பாண மாவட்டங்களில் கையெழுத்து பெற்று இன்று மனித உரிமை தினத்தில் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (4-285)

## மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினையை தீர்க்குமாறு கோரி மகஜர் கையளிப்பு



(நெளுக்குளம்)

மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினையை தீர்க்குமாறு கோரி வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் மாற்றுத்திறனாளிகளால் நேற்று மகஜர் ஒன்றுகையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரில் பிரதேச வைத்தியசாலைகளில் மாற்றுத் திறனாளிகளின் சில தேவைகள் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது. அவற்றை சீர்படுத்தல், மாற்றுத்திறனாளிகளிற்கான கொடுப்பனவு வழங்குவதில் ஒரு முறைமையை உருவாக்குதல், மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்தல், மின் சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கல், அவர்களது உற்பத்தி பொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்பினை வழங்குதல் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து குறித்த மகஜர் கையளிக்கப்பட்டது. (4-299)

## தங்கம் தோண்ட முற்பட்ட இடத்தில் அகழ்வுப் பணி



(பணிக்கன்குளம்)

இறுதி யுத்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்ட தங்கத்தை தோண்டி எடுக்க முயற்சித்ததாக இரண்டு பிரதான அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு எதிராக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த தங்கம் இருப்பதாக தெரிவிக்கப்பட்ட இடமான முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் அகழ்வு நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. முல் லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் அகழ்வு நடவடிக்கைகள் பொலிஸாரால் ஆரம்பிக்கப் பட்டுள்ளது . (4-281)

## போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ள மாணவர்களின் விபரங்கள் சேகரிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளுக்கு பேருந்துகள் பயணிக்காததன் காரணமாக போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள மாணவர்கள் தொடர்பான விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை திரட்டி வருகின்றது. பாடசாலைகளின் அதிபர்களிடம் வலயக் கல்விப் பணிமனையின் அதிகாரிகள் இவ் விபரங்களை திரட்டி வருகின்றனர்.

பாடசாலையில் மாணவர்கள் வந்து செல்லக் கூடிய பேருந்து வசதிகள் இடம் பெறுகின்றனவா? அல்லது மாணவர்கள் நீண்ட நேரம் கழித்து பாடசாலைக்கு வருகின்றார்களா? அல்லது செல்கின்றார்களா? பேருந்துகள் பாடசாலைக்கு வந்து செல்லக் கூடிய வழித்தடம் உள்ளதாக? போன்ற விபரங்கள் அதிபர்களிடம் அதிகாரிகளினால் பெறப்பட்டுள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளன. (4-350)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 420 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 500 |
| தக்காளி | 500 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 340 | 330 | 400 |
| கரட் | 250 | 340 | 400 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 320 | 280 | 250 |
| வாழைக்காய் | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 210 | 160 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 160 |
| பாகற்காய் | 550 | 600 | 600 |
| வெண்டிக்காய் | 320 | 240 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 160 |
| பயற்றங்காய் | 550 | 500 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 160 | 160 | 200 |
| கறிமிளகாய் | 550 | 550 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 800 |
| போஞ்சி | 350 | 300 | 350 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 140 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 220 | 200 |
| வெங்காயப்பூ | -- | 480 | -- |
| முள்ளங்கி | 160 | 140 | 240 |
| பொன்னாங்காணி | 50 | 80 | 60 |
| வல்லாரை | -- | 250 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 120 |

## சாரதிகள் வாய்த்தர்க்கம்; போக்குவரத்து ஸ்தம்பிதம்



(குருமன்காடு)

வவுனியா, மன்னார் வீதியில் பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் கார் ஒன்றும் வீதியை மறித்து முரண்பட்டமையால் அவ் வீதியூடான போக்குவரத்து அரை மணி நேரம் பாதிப்படைந்தது.

குறித்த சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றது.இதனையடுத்து அவ் வீதி வழியாக செல்ல முடியாமையால் மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர். போக்குவரத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து வாகனங்களை அகற்றியதுடன், போக்குவரத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி எனக்கூறி கற்களை எறிகின்றனர்

## மைத்திரி சாடல்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் மீது அனைத்து குப்பைகளையும் தூக்கி எறிய வேண்டாம் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய செயற் குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் நல்லாட்சி அரசாங்கம் நாட்டுக்கு செய்தவற்றை விளக்கமாக கூற தனியான கருத்தரங்கை கூட நடத்த முடியும். நல்லாட்சி, நல்லாட்சி எனக் கூறி கற்களை மாத்திரம் எறிந்து வருகின்றனர். தேர்தல் வரைப்படத்தை சுருட்டியது நல்லாட்சி அரசாங்கம் அல்ல, ஜே.ஆர். ஜெயவர்தன.

நான் 19வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டுக்கு ஜனநாயகத்தை வழங்கியவன். உலகில் எந்த ஜனாதிபதி தனக்காக அதிகாரங்களை குறைத்துக்கொண்டார் எனவும் மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பினார். (நி)

# பிரதேச சபை உறுப்பினர் மூவருக்கு கொவிட்


(குருமன்காடு)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மூவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

துரித அன்டிஜன் பரிசோதனையில் குறித்த பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொவிட் தொற்றுக்குள்ளான மூவரும் சுகாதார பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (4-250)

# கனேடிய உயர்ஸ்தானிகருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு



(கொழும்பு)

கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கினான் மற்றும் உதவியாளர் டானியல் பூட் ஆகியோருடனான அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு ஒன்றை கூட்டமைப்பினர் மேற்கொண்டனர். நேற்று கொழும்பில் உள்ள உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், வினோ நோகராதலிங்கம், மற்றும் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பில் தற்போதுள்ள அரசியல் சூழ் நிலைகள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.(4)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

### 2022 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்றமானது 2022 ஆம் ஆண்டிற்கானகீழ் குறிப்பிடப்பட்டுள்ள வழங்குபொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ளவிரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது. விண்ணப்பப்படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நாட்களில் மு.ப 8:30 தொடக்கம் பி.ப 3:00 வரை பதிவுக்கட்டணம் ரூ.1000.00 செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் 31.12.2021 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தொகுதிகள்**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் / வேலை
தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும்

**பொருட்கள்**

| தொகுதி இல | பொருட்கள் வழங்குதல் (பொது) |
|---|---|
| A-01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடையபொருட்கள் |
| A-02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/ உருக்கு/ ஏனையவை) |
| A-03 | கணனிகள்,கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள் றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A-04 | ஜன்னல்,திரைச்சீலைகள்,சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| A-05 | குளியலறைப் பொருத்திகள்,மாபிள் கல் வகைகள் நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| A-06 | கட்டட இரும்புப் பொருட்கள்,பெயின்ற்,வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயார் பொருட்கள் |
| A-07 | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள்,மின்னிணைப்பிற்கான பொருட்கள், மின் மோட்டர்கள், மின்சார பல்புகள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A-08 | தும்புத்தடி,விளக்குமாறு,கால்துடைப்பம்,மொப்பர் மற்றும் ஏனையவை |
| A-09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹாபிக் மற்றும் கிருமி நாசினிகள் ஏனையவை |
| A-10 | வாகனஉதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை |
| A-11 | தோலுற்பத்திப் பொருட்கள், கம் பூட்ஸ், சப்பாத்துக்கள் |
| A-12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A-13 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A-14 | இரும்புபொருட்கள் |
| A-15 | கற்கள் மணல் வகைகள் |
| A-16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A-17 | பனைமரங்கள், சலாகைகள் |
| A-18 | பாதணிகள், தோற்பொருட்கள் |
| A-19 | அலங்காரப் பொருட்கள் |
| A-20 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள் |

| தொகுதி இல | வேலைகள் விவரம் |
|---|---|
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழிநுட்ப ஆலோசனையும் வழங்குதல் |
| B-02 | உருக்கு,மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B-03 | மின் உபகரணங்கள் திருத்தம்,சேவிஸ் செய்தல் (காற்றுக் குளிராக்கி,நிழற்படப்பிரதி இயந்திரம்,கணனி விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரம்) |
| B-04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீளமுறுக்குதலும். |
| B-05 | பதிப்பக வேலை சகலவித படிவங்கள்,ஏனையவை. |
| B-06 | கட்டட அமைப்பும் திருத்த வேலையும் |
| B-07 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரித்தலும் |
| B-08 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B-09 | கோலவுடை தைத்தல், திரைச்சீலை |
| B-10 | இறப்பர் முத்திரை வகைகள் தயாரித்து வழங்குதல் |

**நிபந்தனைகள்**

1. வழங்கல்கள்/சேவைகள் 2022ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும்.
2. திருப்திகரமற்ற வழங்கல்கள்/ சேவைகள் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
3. பதிவிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு உண்டு.
4. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொகுதி இல | வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| C-01 | சகல விதமானவாகனதிருத்தமும்,மின்சாரவேலை,வாகனஉட்பக்கம்,சீற் என்பவற்றுக்கான குசன் வேலை. |
| C-02 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு. |
| C-03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |

இ.சிவமங்கை,
தவிசாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

(C-3154)


# சோதனை முடிவுகள் கிடைக்கும் வரை கப்பலில் இருந்து இறக்கத் தடை

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு எரிவாயு விநியோகம் செய்வதற்காக கொழும்பை வந்தடைந்த கப்பலில் இருந்து இரண்டு தனிப்பட்ட எரிவாயு மாதிரிகளை பெற்றுக்கொண்டதாக இலங்கை அங்கீகார சபை நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

குறித்த எரிவாயு மாதிரிகளின் சோதனை முடிவுகள் கிடைக்கும் வரை கப்பலில் இருந்து எரிவாயு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என அந்த சபை மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# அமெரிக்க தூதுவராக பொறுப்பேற்றார் மஹிந்த



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க இலங்கையின் புதிய அமெரிக்கத் தூதுவராக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். அமெரிக்கா, மெக்ஸிக்கோ மற்றும் ட்ரினிடாட் எண்ட் டுபேகோ ஆகிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவராக மஹிந்த சமரசிங்க நேற்று முன்தினம் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.27 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக மஹிந்த சமரசிங்க கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# சீன உர நிறுவனங்களுக்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு

(கொழும்பு)

பக்ரீரியா உள்ளிட்ட தீங்கு ஏற்படுத்தும் பிற உயிரினங்கள் அடங்கிய உரத் தொகையை இந்நாட்டுக்கு கொண்டு வந்ததாக கூறப்படும் சீன நிறுவனங்களுக்கு, மற்றும் அதன் தேசிய முகவர்களுக்கு பணம் வழங்குவதை தடுத்து மக்கள் வங்கி மீது விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு இம்மாதம் 28 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு வணிக மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத்தேர்தல்களை விரைவில் நடத்துங்கள்

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)
மட்டுப்படுத்தப்படும் வகையில் பழைய தேர்தல் முறையிலாவது மாகாணசபைத் தேர்தல்களை இம்முறை மாத்திரம் நடத்துவது பொருத்தமானது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் நேற்று முன்தினம் பரிந்துரைத்தது.

சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற விசேட குழுவில் சாட்சியமளித்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நீண்டகாலமாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு.

அத்துடன் அடுத்த வருட முதலாவது காலாண்டுக்குள் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகக் கூடியது 5.500 ஆக வரையறுக்கப்பட வேண்டும்.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என சட்டமா அதிபர் கருதுவதாகவும், அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் கொண்டு வரப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற விசேட குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். (நி)

# சிலாபம் வீதியில் கோரவிபத்து! உடல் கருகி ஒருவர் உயிரிழப்பு



(சிலாபம்)
ஆனமடுவ - சிலாபம் வீதியில் சங்கட்டிகுளம் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி தீப்பிடித்ததில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபத்திலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியோரத்தில் சென்ற மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் ஸ்தலத்திலேயே தீப்பற்றி எரிந்தது.

இதில் மூன்று பிள்ளைகளின் தந்தை துரதிஷ்டவசமாக மோட்டார் சைக்கிளில் சிக்கி விபத்துக்குள்ளானதாகவும், திடீர் தீயினால் அவர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# அடுத்த வருடத்தில் 436,000 புதிய நீர் விநியோகங்கள்

(கொழும்பு)
2022 ஆம் வருடத்தில் நான்கு இலட்சத்து 36 ஆயிரம் புதிய நீர் விநியோகங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அதனால் எந்த பிரதேசத்துக்காவது நீர் இல்லாத பிரச்சினை இருந்தால், அதுதொடர்பில் அறிவித்தால் நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக இருக்கின்றோம் என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சு, நீர்வழங்கல் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் மீதான வரவு-செலவு திட்ட குழுநிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (நி)

# பாரிய அளவில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்

## சபையில் அனுரகுமார

(கொழும்பு)
இறக்குமதிக்கான நெருக்கடி காரணமாக நாட்டில் பாரிய அளவில் பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படப்போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

வெளிநாட்டு கையிருப்பு நெருக்கடி காரணமாக, அத்தியாவசிய பொருட்கள் உள்ள டாங்கிய ஆயிரத்திற்கும் அதிகமான கொள்கலன்கள் விடுவிக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை விடுவிக்க இறக்குமதியாளர்களுக்கு வங்கிகளில் டொலர்களை விடுவிக்க முடியாத நிலையையொன்று ஏற்பட்டுள்ளது.

அதேபோல் உராய்வு எண்ணெய் இறக்குமதி செய்ய முடியாத நிலைமைக்கு கையிருப்பு இல்லாதமையே காரணமாகும். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்படவும் இதுவே காரணம் ஆகும். (நி)

# இன்று ஒரு தகவல்

## மறுப்பது எப்படி?

மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்வதை வாழ்வின் குறிக்கோள்களுள் ஒன்றாகக் கொண்டு வாழ வேண்டியது தான். இல்லை என்று மறுக்கவில்லை. அதற்காக நம் நேரம் நம் உடமைகள் அனைத்தையும் நாம் மற்றவர்களுக்குத் தியாகம் செய்ய வேண்டும் என்கின்ற கட்டாயம் ஏதுமில்லை.

உதவி மனப்பான்மை உள்ளவன் என்று தெரிந்து விட்டால் அவன் தலையில் மிளகாய் அரைக்கும் பொல்லாத உலகம் இது. அத்தகையவனை இளித்த வாயனாக்கி வேடிக்கை பார்க்கவும் ஆரம்பித்து விடும்.

சில சமயங்களில் நம்மால் செய்ய இயலாத உதவிக்கான விண்ணப்பங்கள் நமக்கு வந்து சேரும். நேரமும் சுற்றுப்புறமும் அதைத் தடை செய்யும். அது ஆபத்தான உதவியாக இருக்கும்.

மேலும் உங்களின் பெருந்தன்மைக்கும் பொறுமையின் எல்லைக்கும் சோதனையை ஏற்படுத்தக் கூடிய உதவியாகவும் இருக்கலாம்.

மற்றவர் சம்பந்தப்பட்ட ஆனால் அவரது விருப்பத்துக்கு நேர்மாறான உதவியாக இருக்கலாம்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் நீங்கள் அவ்வுதவிகளை மறுக்க நேரிடலாம். அப்போது இதமாக பண்போடு மறுக்க வேண்டும். பொறுமை இழந்தோ கோபமாகவோ மறுக்காதீர்கள்.

நடக்காது, முடியாது, கிடையாது வேறு ஆளைப் பார், மாட்டேன் என்பன போன்ற வார்த்தைகளை நேரடியாகப் பயன்படுத்தாதீர்கள். மன்னிக்க வேண்டும், வருந்துகிறேன், என்னால் உதவ முடியாத சூழ்நிலை என்பன போன்ற இதமான வார்த்தைகளைச் சொல்லுங்கள்.

அதாவது மாவு ஒன்று தான். பண்டம் தான் வேறு. தெரியாதவர்களாக இருந்தால் இந்த அளவோடு நிறுத்திக்கொள்ளுங்கள். நண்பர்களாகவோ உறவினர்களாகவோ இருந்தால் உங்களால் ஏன் உதவ முடியவில்லை என்பதற்கான காரணத்தை அவர் மனம் ஏற்றுக் கொள்ளும் படி பண்போடு விளக்குங்கள்.

இன்னும் தெளிவாகக் கூற வேண்டுமானால் நமக்கு மனமிருந்தும் மார்க்கமில்லை என்பதை மற்றவர் உணரும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ளவில்லையானால் நான் ஒரு யோசனை சொல்கிறேன் என்பதாக ஒரு பீடிகையைப் போட்டுவிட்டு அவர் பயனடையும் வகையில் மாற்று வழிகள் எவையேனும் இருப்பின் அவற்றைச் சொல்லலாம்.

உதவி செய்யும் எண்ணம் அரைகுறையாக இருந்தால் அவர்களது கதையைக் கேளுங்கள். அத்தகைய எண்ணம் அறவே இல்லையென்றால் அவர்களைப் பேச விடாதீர்கள். காரணம் அனைத்தையும் கிண்டிக் கிளறிக் கேட்டுவிட்டு அதற்கு பிறகு மறுப்பது பண்பல்ல.

ஒட்டு மொத்தமாகச் சொல்ல வேண்டுமானால் உதவி மறுக்கப்பட்டதன் மூலமாக அவர் வருத்தப்படலாமே தவிர உதவி மறுக்கப்பட்ட பணியில் அவருக்கு வருத்தம் ஏற்படக்கூடாது. இத்தகைய செயல்கள் தான் நாம் நம்மிடம் உதவி கேட்டு வருபவர்களுக்குச் செய்யக்கூடிய தலையாய உதவியாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சவாலே சமாளி

“புலியாரே! உம்மைப் பற்றி நான் அப்படிச் சொல்வேனா? யாரோ உம்மிடம் பொய் சொல்லி இருக்கின்றனர்” என்று நடுங்கியபடி சொன்னது.

“வேறு யாராவது சொல்லியிருந்தால், நம்பியிருக்க மாட்டேன். என் மனைவி தான் அப்படிச் சொன்னாள்.


என் முன் பேசுவதற்கே நீ நடுங்குகிறாய்... உன்னைப் பார்க்கப் பரிதாபமாக உள்ளது. நீ என் மனைவியிடம் வந்து அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லி மன்னிப்புக் கேள்.

உன்னை உயிருடன் விடுகிறேன். இல்லையேல் இங்கேயே கொன்று விடுவேன்” என்று உறுமியது புலி.

“நான் எங்கே வேண்டுமானாலும் வந்து அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறேன். ஆனால், இப்போது என்னால் வர முடியாது. இன்னொரு நாள் வந்து சொல்கிறேன்!” என்றது ஆமை.

“இப்போது உன்னால் வர முடியாதா? ஏன்?” என்று உறுமியது புலி.

“எனக்குக் காய்ச்சல் அடிக்கிறது. உடம்பு நெருப்புப் போலச் சுடுகிறது. இந்த நிலையில் என்னால் இரண்டடி தொலைவு கூட நடக்க முடியாது. காய்ச்சல் சரியானதும்,



நானே உங்கள் மனைவியிடம் வருகிறேன்.

நான் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறேன். இப்போது என்னை வற்புறுத்தாதீர்” என்று கெஞ்சியது ஆமை. “உன்னால் நடக்கத்தானே முடியாது. என் முதுகில் அமர்ந்து கொள். உன்னை என் மனைவியிடம் தூக்கிச் செல்கிறேன். அவளிடம் அப்படிச்சொல்லவில்லை என்று சொல். பிறகு உன்னை இங்கே கொண்டு வந்து விடுகிறேன்” என்றது புலி. காய்ச்சலில் நடுங்குவது போல நடித்த அது, “அப்படியே செய்கிறேன்” என்றது.

புலியின் மேல் ஏறி அமர்ந்தது. அதைச் சுமந்து கொண்டு புலி செல்லத் தொடங்கியது. “புலியாரே! நில்லும்” என்று குரல் கொடுத்தது ஆமை.


“ஏன் நிற்கச் சொன்னாய்?” என்றபடியே புலி நின்றது. “புலியாரே! உன் முதுகில் அமர்ந்து இருக்க என்னால் முடியவில்லை. காய்ச்சலில் கீழே விழுந்து விடுவேன் போல உள்ளது!” என்றது ஆமை.

(தொடரும்)

# மகாபாரதம்

264

**நல்ல அறிவுதான் இன்பத்திற்குக் காரணம்**



“மனிதனுக்குச் செல்வம் என்று போற்றத்தக்கது அறிவு தான். அறிவு உடையவன் செல்வம் உடையவன் ஆவான்.

சுவர்க்கம் கூட அறிவினால்கிடைக்கும் என்பது மேலோர் கருத்து. பிரகலாதன், மங்கி போன்றவர்கள் செல்வத்திற்கு அழிவு நேர்ந்த போது அதனை அறிவாலேயே திரும்பப் பெற்றுள்ளனர்.

அத்தகைய அறிவை விடச் சிறந்தது ஏதுமில்லை. இது தொடர்பாக காஸ்யபருக்கும் இந்திரனுக்கும் நடைபெற்ற உரையாடலைச் சொல்கிறேன்” என பீஷ்மர் தருமருக்குக் கூறலானார்.

கர்வமும் மிகுந்த செல்வமும் உடைய வணிகன் ஒருவன் இருந்தான். ஒருநாள் காஸ்யபர் என்னும் இளம் துறவி நடந்து சென்று கொண்டிருந்தார்.

செருக்கு மிக்க அந்த வணிகனின் தேர் காஸ்யபரின் மீது மோத அவர் கீழே விழுந்தார். கடும் சினம் கொண்டார்.

ஆயின் என் செய்வது “பொருள் அற்றோர் நிலை இதுதான். [illegible] விடச் செத்துத் [illegible]யலாம் என மனம் கலங்கிச் செயலற்றுக் கிடந்தார். அந்த நேரத்தில் இந்திரன் நரி உருவம் தாங்கி அங்கு வந்து இளம் துறவியை நோக்கிக் கூறினான்.

பிறவிகளில் உயர் பிறவி மனிதப் பிறவியே. மேலான இப்பிறவியை அடைந்தும் ஏன் இதனைப் பாழாக்குகிறாய்? ஏன் சாக எண்ணுகிறாய்? இவ்வுலகில் கை உள்ளவர்களைப் [illegible] [illegible] போன்ற மனிதருக்குப் பொருளில் ஆசை உள்ளதைப் போல என்னைப் போன்ற விலங்குகளுக்குக் கைகளைப் பெற ஆசை உள்ளது. கைகள் இல்லாததால் காலில் தைக்கும் முள்ளைக் கூட அகற்ற முடியாது.

தொல்லை தரும் ஈ, எறும்பைக் கூட எங்களால் அகற்ற இயலவில்லை. கைகள் இருந்தால் இத்தகைய தொல்லைகளை அகற்றலாம்.

கையில்லாததால் சரியாக உணவைக் கூட உண்ண முடியவில்லை. உடை உடுத்த முடியவில்லை. கை உள்ளவர்கள் எல்லாவற்றையும் எளிதாக அனுபவிக்கிறார்கள். உன்னுடைய புண்ணியத்தால் நாயாகவோ, நரியாகவோ, கிரியாகவோ, எலியாகவோ, பாம்பாகவோ நீ பிறக்கவில்லை.

உனது மேலான மனிதப் பிறவியைப் பற்றிப் பெருமைப்படு. இந்த கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை நல்வழிகளில் பயன்படுத்து. மனிதப் பிறவி தேவப்பிறவியை விடச் சிறந்தது.

எந்தப் பிறவியாயினும் ஆசையை விட்டொழிக்க வேண்டும். தேவன் தேவேந்திரனாக ஆசைப்படலாம்.

அப்படி ஆனாலும் ஆசை அடங்காது. ஒரு பொருளை விரும்பி அது கிடைத்துவிட்டால், அதனாலேயே ஆசை அடங்கி விடுவதில்லை. மனம் வேறு ஒரு பொருளை நாடும். ஆசை கொள்ளும். அப்படி ஒவ்வொன்றாகத் தாவிச் செல்லும் மனதை அடக்குதல் மனிதப் பிறவியில் மட்டுமே கூடும்.

மனதை அடக்கி அதன் மூலம் இன்பம் அடைவதும், மனதை அடக்காமல் அதுபோனபடியே சென்று துன்பம் அடைவதும் உன்னிடத்திலேயே இருக்கிறது. ஐம் பொறிகளையும் ஆமை போல் அடக்குபவனுக்குத் துன்பம் இல்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பூஸ்டர்' தடுப்பூசியை பெற்றுக்கொள்ள மக்களிடையே ஆர்வம் இல்லை

## வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குமான மூன்றாவது தடவை தடுப்பூசி வழங்கல் பணி வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் போதும் மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனவே கோவிட்-19 நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க மேற்குறிப்பிட்ட அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கோவிட் - 19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மேலதிகமாக மூன்றாவது தடவையாக (பூஸ்டர்) கோவிட்-19 தடுப்பூசியானது நவம்பர் 22ஆம் திகதி முதலும் மற்றும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நவம்பர் 29ஆம் திகதி முதலும் வழங்கப்பட்டுவருகின்றன.

எனினும் வருந்தத்தக்க வகையில் இவ் மேலதிக தடுப்பூசியினை பெற்றுக்கொள்வதில் மக்களிடையே ஆர்வம் குறைவாகவே காணப்படுகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

வடமாகாணத்தில் ஏற்பட்டுள்ள இறப்புக்களை ஆராயும்போது வயது முதிர்ந்தவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாக காணப்படுகின்றது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்வதன் மூலம் மட்டுமே கோவிட்-19 தொற்று ஏற்பட்டாலும் அதன் தாக்கத்தையும் அதன் மூலம் ஏற்படும் இறப்புக்களையும் குறைக்கக்கூடியதாக இருக்கும்.

நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் மற்றும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது ஒரு மாத இடைவெளியின் பின்னரும் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் மூன்று மாத இடைவெளியின் பின்னரும் இத் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம்.

எனவே மேற்குறிப்பிட்டவர்களில் சினோபாம் கோவிட்-19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையினை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை (பூஸ்டர்) பெற்றுக்கொள்ள முடியும் என்றுள்ளது. (ம-3,33,104)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 05 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கைதடி மாகாண சபை, நாவற்குழி சங்கன் கட்டுமானம், சித்தமருத்துவம் கைதடி, யுனைற்றற் மோட்டார்ஸ் நுணாவில், கைதடி நாராயணா வன் பொருள், அறுகுவெளி, நாவற்குழி அரசு உணவுக் களஞ்சியம், நாவற்குழி, கைதடி, மானிப்பாய் வீதி (கலைவாணி) நவபுரம், கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனம், கைதடி மானிப்பாய் வீதி கோப்பாய் வரை, கள்ளி நகர், கல்வயல், மானாவளை, சந்திரபுரம், கெருடாவில், கோகிலாகண்டி மங்களாபட்டறை, நாவற்குழி லிங்ஷ் ரெடிமிக்ஸ், நுணாவில்பருத்தித்துறை வீதி, மட்டுவில், வாகையடி, மறவன்புலவு, கேரைதீவு வீதி, நாவற்குழி சந்தி, நுணாவில் சந்தி, புத்தூர் வீதி- மட்டுவில் இராணுவமுகாம், முதியோர் இல்லத்தடி கைதடி- ஏ-9 வீதி, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, சுன்னாகம் கார்கில்ஸ், சுன்னாகம் மக்கள் வங்கி, சுன்னாகம் இலங்கை வங்கி, சுன்னாகம் சந்தை, சுன்னாகம் கொமர்ஷல்வங்கி, ஜெட் மோட்டார் சுன்னாகம், கல்லாரை, கந்தையா உபாத்தியார் சந்தி, கொத்தியாவத்தை, செல்வ மஹால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, பூநாறிசந்தி, சிவப்பிரகாசம் வீதி, சுகாதாரத்திணைக்களம், புதிய மூன்று மாடிக் கட்டடம் (போதனா மருத்துவமனை), யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, மருத்துவமனை வீதி, மருத்துவ பீட அரங்கம், பொக்ஸ்ரெஸ்ட் (பிறைவேட்) லிமிட்டெட், மருத்துவபீடம், அச்சுகூடம், கே.கே.எஸ்.வீதி, கொக்குவில், மாவடி- திருநெல்வேலி, நந்தாவில், பிரம்படி கொக்குவில், சைலோ கோயில் வீதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** ரூபவாஹினி- கொக்காவில் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கொன்வென்ட் வீதி, மன்னார் நகரம், இலங்கை மின்சார சபையடி, மூர்வீதி, நளவன் பாடி, புதுத்தெரு (பள்ளி முனை), இளையோர் சேவை மையத்தடி, பள்ளி முனை, மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்டியன் தேவாலயம், யு.சிமைதானம் மன்னார், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கச்சேரி வளாகம், மன்னார் நீர் வழங்கல் சபை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், கார்கில்ஸ் பூட் சிட்டி, மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

அற உணர்ச்சி அளிக்காத சடங்குகள் அனைத்தும் அழிக்கத்தக்கவைகளே.

–ஸவனரோலோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ஒரு துறவியின் துறவு அப்போதும் இப்போதும்

ஒரு துறவியின் துறவு என்பது இராசதுரை என்ற ஈழத்து எழுத்தாளரின் சிறு கதை.

பௌத்த துறவி ஒருவரை மையப்படுத்தியதாக அக்கதை அமைந்திருந்தது.

கௌதம புத்தபிரானின் போதனைகளைக் கற்றறிந்து அதில் பக்தி கொண்ட ஒரு சிறுவன் தன்னைப் பௌத்த துறவியாக ஆக்கிக் கொள்ளும்பொருட்டு, பிரிவேனாப் பள்ளியில் சேர்ந்து பௌத்த துறவியாக ஆகின்றார்.

பௌத்த துறவியாகி ஒரு குறிப்பிட்ட காலம் கடந்த நிலையில், அவரின் தாயும் தந்தையும் மூப்பின்காரணமாக இயலாமைக்கு ஆளாகின்றனர்.

இந்தநிலையில் பௌத்த துறவியான மகன் தன்னைப் பற்றிச் சிந்திக்கின்றார்.

முன்னறி தெய்வமாகிய அன்னையும் பிதாவும் இயலாமையால் கஷ்ரப்படும்போது, உடன் இருந்து அவர்களைப் பராமரிப்பதா? அன்றி பௌத்த துறவியாக இருப்பதா? என்ற கேள்வி அவரைத் துளைக்கின்றது.

இந்த நேரத்தில் அந்தப் பௌத்த துறவி ஒரு முடிவை எடுக்கின்றார்.

ஆம், பௌத்த துறவியாக இருப்பதைவிட, தன் பெற்றோர்களைப் பராமரிப்பதையே கௌதம புத்தபிரான் விரும்புவார் என முடிவு செய்து தன் துறவைத் துறந்து பெற்றோரைப் பராமரிக்கச் செல்கின்றார்.

இதுவே ஒரு துறவியின் துறவு என்ற சிறு கதையாகும்.

அதுசரி, இப்போது இச்சிறுகதை எதற்கானது என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால்; நேற்று முன்தினம் (02) யாழ்ப்பாணம் ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்பதற்கு வருகை தந்த யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதி பதி கண்டி நடனத்துடன் பட்டுக்குடை பிடிக்க, ஊர்வலமாக நடந்து விழா மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்.

இஃதென்ன ஆச்சரியம். ஒரு பௌத்த துறவிக்கு கண்டி நடனம், பட்டுக்குடை இவை எதற்கானது என்று சிந்தித்தபோதுதான் ஒரு துறவியின் துறவு அப்போதும் இப்போதும் என்ற ஒப்பிடுகை எமக்குள் தோன்றியது.

அந்தோ! புனரமைக்கப்பட்ட ஒரு குளத்தின் திறப்பு விழாவுக்கு ஒரு துறவி இப்படிப் போக வேண்டியதன் அவசியமும் தேவையும் என்ன? என்ற வினா எழுகிறது.

என்ன செய்வது அரசியல் சிறுமைத்தனங்கள் துறவிகளையும் துடைத்தெறிகிறது.

புத்தபிரானின் போதனைகளையும் தகர்த்தெறிகிறது என்பதையே உணர முடிகிறது.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உலகத்துக்காக தியாகம் செய்

❖ நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள்.

❖ ஒருவருக்கொருவர் நன்மை செய்வதன் மூலமாகத் தான், நற்பலன்களை அடைய முடியும்.

❖ மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கே செல்லவும் தயாராக இருக்கவேண்டும். மரணம் ஒருநாள் உறுதி என்னும்போது நல்ல செயலுக்காக உயிரை விடுவது மேலானது.

❖ பெரியவர்கள் பலர் செய்த தியாகத்தின் பயனையே இன்று மனிதகுலம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை உலகம் முழுவதிலும் காணமுடியும்.

❖ உன் சொந்த முக்திக்காக நீ உலகத்தைத் துறந்து விட விரும்பினால் அது ஒன்றும் பாராட்டத்தக்கது அல்ல. ஆனால், உலக நன்மைக்காக உன்னை நீயே தியாகம் செய்ய முடியுமானால் கடவுளாகி விடுவாய்.

❖ உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பி ஓட முயற்சிக்காதே. வெற்றி, தோல்வி என்று கவனித்துக் கொண்டிருக்காதே. உடனடியாக, தியாக உள்ளத்துடன் சேவையில் ஈடுபடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

27

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



**எபிரேய எண்களின் முறைமை (Hebrew numerals) (கி.மு. 2 ஆம் நூற்றாண்டு).**

எபிரேய எண்களின் (Hebrew numerals) முறைமை என்பது எபிரேய எழுத்துக்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு தசம அகரவரிசை எண் அமைப்பு ஆகும்.

கி.மு. 2 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிரேக்க எண்களிலிருந்து இந்த முறைமை உருவாக்கப்பட்டது.

தற்போதைய எண் முறைமை எபிரேய அகரவரிசை எண் முறைமை என்று அழைக்கப்படுவதோடு பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட எண்கள் எழுதும் முறையில் இருந்து வேறுபடுகிறது.

இந்த முறைமையில், பூச்சியத்திற்கான குறியீடு எதுவும் இல்லை. ஒவ்வொரு அலகுக்கும் (1, 2,..., 9) தனித் தனி எழுத்துக்கள் உள்ளன, அதேபோல் ஒவ்வொரு பத்துக்கும் (10,20,..., 90) தனித்தனி எழுத்துக்கள் உள்ளன, மற்றும் முதல் நான்கு நூறுகளுக்கும் (100, 200, 300, 400) தனித்தனி எழுத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பிந்திய நூற்றுக்கணக்கான அதாவது 500, 600, 700, 800 மற்றும் 900 ஆகியவற்றுக்கான குறியீடுகள் முதல் நான்கு நூறுகளைக் குறிக்கும் இரண்டு அல்லது மூன்று எழுத்துக்களின் கூட்டுத் தொகையால் குறிக்கப்படுகின்றன. அதைவிட அவற்றுக்கு தனியான குறியீடுகளும் உண்டு.

இவ்வாறே 1,000 முதல் 999, 999 வரையிலான எண்களும் குறிக்கப்படுகின்றன. ஒன்றுக்குரிய குறியீடு N ஆகும். 1,000 இற்கான குறியீடு 'N ஆகும். 'N'N என்பது 1,000,000 ஐக் குறிக்கும். இவ்வாறே மற்றவையும்.

அதாவது ஒரேஎழுத்துக்கள் ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான மற்றும் நூறாயிரக் கணக்கானவை ஆக மீண்டும் பயன்படுத்தப்படுகின்றன.

யூத எண் கணிதம் (Gematria) இந்த மாற்றங்களை விரிவாகப் பயன்படுத்தியது. எபிரேய அல்லது ஹீப்ரு எண் முறைமையில் சில நேரங்களில் ஐந்து வெவ்வேறு எழுத்து வடிவங்கள் 500,600, 700, 800, 900 இற்கு பாவிக்கப்படுகின்றன. அவையும் உரு 24 இல் காட்டப்பட்டுள்ளது.







**சிரியாக் எண்முறைமைகள் (Syriac alphabetic numerals)**

சிரியாக் எண்கள் பாரம்பரியமாக அகரவரிசையில் உள்ளன. இதன் அமைப்பு மிகவும் பாரம்பரியமான எபிரேய அரபு (அப்ஜாடி எண்கள்), ஆர்மீனியன், கிரேக்கம் மற்றும் சிரிலிக் போன்ற மொழிகளில் பயன்படுத்தப்படும் அகரவரிசை எண்களைப் போன்றது. எண்கள் வலமிருந்து இடமாக வாசிக்கப்படும்.

ஒன்றைக் குறிக்கும் குறியீட்டுக் கீழே ஒரு கோடு சரிவாக கீறினால் அது அக்குறியிட்டின் 1,000 மடங்கைக் குறிக்கும். ஒன்றைக் குறிக்கும் குறியீட்டுக் கீழே ஒரு இரட்டைக கோட்டை கிடையாக கீறினால் அது அக்குறியீட்டின் 10,000 மடங்கைக் குறிக்கும். இந்த முறைமையில், பூச்சியத்திற்கான குறியீடு எதுவும் இல்லை, ஒவ்வொரு அலகுக்கும் (1, 2, ..., 9) தனித் தனி எழுத்துக்கள் உள்ளன, அதேபோல் ஒவ்வொரு பத்துக்கும் (10, 20, ..., 90) தனித் தனி எழுத்துக்கள் உள்ளன, மற்றும் முதல் நான்கு நூறுகளுக்கும் (100, 200, 300, 400) தனித் தனி எழுத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பிந்தைய நூற்றுக்கணக்கான அதாவது 500, 600, 700, 800 மற்றும் 900 ஆகியவற்றுக்கான குறியீடுகள் முதல் நான்கு நூறுகளைக் குறிக்கும் இரண்டு அல்லது மூன்று எழுத்துக்களின் கூட்டுத் தொகையால் குறிக்கப்படுகின்றன.

அதைவிட அவற்றுக்கு தனியான குறியீடுகளும் உண்டு. 500, 600 போன்றவற்றுக்கான தனிக் குறியீடுகள் 50, 60 போன்றவற்றுக்கான குறியீடுகளுக்கு மேல் குற்று (புள்ளி) இட்டு உருவாக்கப்பட்டுள்ளன. இம் முறைமை உரு 24A இல் காட்டப்பட்டுள்ளது.




**சீன எண் முறை**

இன்று, சீன மொழி பேசுபவர்கள் மூன்று எழுதப்பட்ட எண் (கணித) முறைகளைப் பயன்படுத்துகின்றனர். உலகளவில் பயன்படுத்தப்படும் அரபு எண்களின் அமைப்பு, மற்றும் இரண்டு உள்நாட்டு எண் (கணித) முறைகள். மிகவும் பழக்கமான சுதேசிய எண் (கணித) முறை பேசும் மொழியில் உள்ள எண்களுடன் ஒத்த சீன எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டது.

சீன கலாசாரத்தை மையமாகக் கொண்ட கொரிய, ஜப்பானிய மற்றும் வியட்நாமிய மொழிகளுடன் சுதேசிய எண் (கணித) முறை பகிரப்பட்டுள்ளது. சீனா மற்றும் தாய்வானில் உள்ள பெரும்பாலான மக்கள் மற்றும் நிறுவனங்கள் முதன்மையாக அரபு அல்லது கலப்பு அரபு-சீன எண் (கணித) முறையை (உதாரணமாக 0 இற்கான சீன எண் 〇 ஆகும் அதற்கு பதிலாக 0) வசதிக்காக பயன்படுத்துகின்றன.

பொதுவாக இலகுபடுத்தப்பட்ட சீன எண்கள் பாவனையில் உள்ள போதும் பாரம்பரிய சீன எண்களே நிதிய விடயத்தில் பயன்படுத்துகின்றன, முக்கியமாக காசோலைகளில் தொகைகளை எழுதுவதற்கு, ரூபாய் நோட்டுகள், சில சடங்கு சம்பிரதாய சந்தர்ப்பங்கள், சில பெட்டிகள் மற்றும் விளம்பரங்களில் பயன்படுத்துகின்றன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வட மாகாண...

பாடசாலைகளுக்கான பதில் நாள் பாடசாலைகள் இன்று சனிக்கிழமை நடைபெறும் என வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

அனைத்து தரங்களைக் கொண்ட வகுப்பினர்களுக்கும் இவ்வாறு பதில் நாள் பாடசாலைகள் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-03,18,33)

## எதிர்வரும்...

மீண்டும் செயற்படுத்த மூன்று நாட்கள் ஆகும் என்று இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதனால் நாடு முழுவதும் சுழற்சி முறையில் மின்சாரம் தடைப்பட வாய்ப்புள்ளது.

900 மெகாவோட்ஸ் மின்தேவை காரணமாக நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் மின்சாரத் தேவையை நிறைவு செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மின்சார விநியோகம் தடைப்படலாம் எனத் தெரிவித்த பொது முகாமையாளர், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மின்சார விநியோகம் வழமைக்குத் திரும்பும் என நம்பிக்கை வெளியிட்டார். (ம-03)

## நாசகார...

ளின் நாசகார நடவடிக்கையாக இருக்கலாம் என இலங்கை மின்சார சபை சந்தேகம் வெளியிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) பகல் முதல் மின் விநியோகம் தடை செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மின் தடை குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மின்சார சபையின் (CEB) பொது முகாமையாளர் எம்.ஆர். ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மின்சாரத்தை மீளப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆனால் தொழிற்சங்கங்கள் தமக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் மின்வெட்டு நாசகார நடவடிக்கையாகக் கூட இருக்கலாம் என சந்தேகிப்பதாக அவர் கூறினார். (ம-03)

## 20 பேர்...

எண்ணிக்கை 14,419ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## நபிகளை...

டுள்ளது.

நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தினார் என குற்றம்சாட்டப்பட்டு இந்த வெறித்தனமான செயல் நடந்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தின், சியால்கோட்டில் உள்ள வசிராபாத் சாலையில் தனியார் தொழிற்சாலையில் இந்த கொடூரம் நடந்துள்ளது. இலங்கையைச் சேர்ந்த பிரியந்த குமார என்பவரே உயிரிழந்தார். தொழிற்சாலையில் நூற்றுக்கணக்கான ஆண்களும் இளைஞர்களும் கூடியிருந்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுள்ளன. அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரைக் கொண்ட சுவரொட்டிகளை இழிவுபடுத்தியதாக தொழிற்சாலை தொழிலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர் என்று சியால்கோட் பொலிஸ் தலைவர் அர்மகன் கோண்டல் அசோசியேட்டட் பிரஸ்ஸிடம் தெரிவித்தார். மேலாளரை தொழிற்சாலைக்குள் கும்பல் அடித்து, சித்திரவதை செய்து கொன்றது. பின்னர் எரித்தது. இந்த கொடூர சம்பவத்துடன் தொடர்புடைய 50 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கொலைச் சம்பவத்தை பஞ்சாப் முதல்வர் உஸ்மான் புஜ்தார் இது ஒரு மிகவும் மோசமான சம்பவம் என்று கண்டித்துள்ளார். மேலும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானும் இந்தச் சம்பவத்தைக் கண்டித்துள்ளார். (ம-03)

## மிருசுவிலில்...

முன்பாக உள்ள ரயில் கடவையில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

புகையிரதக் கடவை ஊடாக கடக்க முற்பட்ட மகேந்திரா வாகனத்தை யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் மோதியதில் இவ் அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இதில் மகேந்திரா வாகனத்தில் பயணித்த கொடிகாமம் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த சூசைநாதன் பிரதீப் (வயது - 38) என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாம்ம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-03,18,30,60,101)

## "ஒமிக்ரோன்"...

இருந்து வைரஸ் வேறு நபர்களுக்கு பரவ வாய்ப்பில்லை எனக் கூற முடியாது. ஆனால் வாய்ப்புகள் மிகக் குறைவு. எவ்வாறாயினும், குறித்த பெண்ணின் பயண விபரங்கள் மற்றும் அவரிடம் பழகியவர்கள் தொடர்பில் எமக்குத் தெரியாது. அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார். (ம-03)

## திருநெல்வேலி...

யில் உள்ள வீடு ஒன்றில் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

குறித்த சம்பவம் நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை இச்சம்பவம் குறித்து முழுமையான தகவல் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. கோப்பாய் தெற்கு இருபாலையில் உள்ள ஒரு வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தபோது அடுப்பு எரிவதனை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளியில் ஓடிச் சென்று அயலவரை அழைத்துள்ளார்.

இதன்போது உடனடியாக ஓடிச் சென்ற அய்லவர்கள் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையினால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள வீடொன்றில் நேற்றுக் காலை 11 மணியளவில் காஸ் அடுப்பு வெடித்த சம்பவம் பதிவாகியுள்ளது. நேற்றுக் காலை சமையல் செய்துகொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா செட்டிகுளம் சின்னசிப்பிகுளம் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது. காஸ் அடுப்பில் சமையல் செய்வதற்கு இயக்கிவிட்டு வெளியில் சென்றுள்ளார். இதன் போது எரிவாயு அடுப்பு திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளதுடன் பின்னர் வெடித்துள்ளது. (ம-03,33, 281,299)

## +725...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 566, 196 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## கூட்ட...

கீட்டிற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் வாக்கெடுப்பை நடத்துமாறு சபையில் கோரினர்.

எனினும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படாமையினால் அதற்கு சந்தர்ப்பம் இல்லையென சபாநாயகர் சுட்டிக்காட்டினார்.

எனினும், அவர்களின் அந்த ஆட்சேபனை பதிவு செய்யப்படும் எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்பை கோரினால் அதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் சபையில் சுட்டிக்காட்டினார்.

அதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமையினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். (ம-03)

## நாடு முழு...

கொத்மலையில் இருந்து பியகம வரையான பிரதான மின்விநியோகக் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, சுமார் 500 மெகாவோட்ஸ் மின்சாரம் தேசிய மின்னோட்டத்துக்கு கிடைக்கப்பெறாதமையினால் இவ்வாறு மின் விநியோகம் தடைப்பட்டிருந்ததாக இலங்கை மின்சார சபை தெரிவித்திருந்தது.

அத்துடன், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நிலையிலேயே மின்சாரத் தடை ஏற்பட்டிருந்தது.

மேலும் இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட "சட்டப்படி வேலை" தொழிற்சங்கப் போராட்டம் நேற்று மாலைமுதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம-03)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபையின் பாதீடு நிறைவேறியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வேலணை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நேற்று இடம்பெற்றது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் 2 உறுப்பினர்கள், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஒரு உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலா ஒரு உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்தனர்.

சபையின் தவிசாளர் மேலதிகமாக ஒரு வாக்கினைச் செலுத்த முடியும் எனும் உள்ளூராட்சி மன்ற சட்டத்திற்கு அமைவாக தவிசாளர் தனது வாக்கினை ஆதரவாக செலுத்திய தன் மூலம் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(ம-3,104)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (8904)

076 825 7716 (ஆகாஸ்)

**இறைச்சிக் கோழிகள் விற்பனை**

புறொய்லர், பேரன்ஸ், கல்பேட் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்தும்/செய்யாமலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**U.S.A விற்பனை நிலையம்**

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500 (8902)

**வேலை வாய்ப்புக்கள்**

- சிற்றூழியர்கள் (பெண்கள்) - O/L தகைமையுள்ளோர்
- ஆலோசகர் (ஆண்கள்/பெண்கள்) - சிங்களம் சரளமாக பேச, எழுதக் கூடியவர்கள்
- நிர்வாக உதவியாளர்கள் (பெண்கள்) - O/L, A/L தகைமையுடையோர்

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் முன் பதிவு செய்து 03.12.2021 - 06.12.2021 வரை நேரில் வரவும்.

முன்பதிவு செய்ய - 071 071 6979 (8865)

WINSTAR CONSULTANTS (pvt) LTD
No.45, Vembadi Street, Jaffna.

**போட்டிப் பரீட்சை நேரடி வகுப்புக்கள்**

ஞாயிறு (5/12) 9.00 am

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு

யாழ். ஆஸ்பத்திரி வீதி (கொமர்ஷல் வங்கி அருகில்)

ஆசிரியர் தெரிவுப் பரீட்சை நேரடி வகுப்பு

ஞாயிறு 9.00 am - 3.00 pm

SLEAS, SLAS, SLPS, SLAcS, GS, MSO

பிரதி ஞாயிறு 9.00am - 3.00pm (C3158)

சகல விபரங்களுக்கும் T.P/Whatsapp 076 688 3394

**காண்டம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (8892)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

**Vacancy**

Pharmasist, Software Engineer, Chef, Marketing Executive, Web Admin, Graphics Designer, Accounts Assistant. (8893)

074 138 3368

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3132)

0768226240 DHL

**தேவை**

யாழ். நகரிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு X-Ray தொழில்நுட்பவியலாளர் தேவை. (பகல் நேரம்) (8896)

076 255 5529
077 212 3486

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், மயிலிட்டி, B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: (8905)

076 890 9259, 077 015 0353

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தி அருகாமையில் புன்னாலைக்கட்டுவன் வீதியில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 500M தூரம்)

தொடர்பு - 077 288 0152 (8906)

**அலுவலகப் பாவனைக்கு வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதிக்கு சமீபமான பகுதியில் அலுவலகப் பாவனைக்கு உகந்த மாடி வீடு வாடகைக்கு உண்டு.

077 148 4540
077 295 1097 (8852)


## மரண அறிவித்தல்

### இக்னேஷியஸ் ரெஜிங்டன் சேவியர்



யாழ்.வயாவிளானைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியா லண்டன் Walesஐ வசிப்பிடமாகவும் கொண்ட இக்னேஷியஸ் ரெஜிங்டன் சேவியர் அவர்கள் கடந்த 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் மரியாம்பிள்ளை சேவியர் (இலங்கை) - பத்திநாயகி (இலங்கை) தம்பதிகளின் அன்பு மகனும் மீனாட்சி அவர்களின் அன்புக் கணவரும் சுரேகா, விஜிங்டன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அனெஸ்டா ரெஜினி ராகுலன் (பிரான்ஸ்), சேவியர் அலெக்ஸ் குயின்டன் (லண்டன்), வினெக்ஸ் Qupan சேவியர் (பிரான்ஸ்), பிரனோ பற்றிமா யூட் செல்வகுமனராஜா (பிரான்ஸ்), ஹிந்துஜா நிமல்ராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜீவா ராகுலன் (பிரான்ஸ்), சுபோ அலெக்ஸ் குயின்டன் (லண்டன்), மேரி சப்ரினா வினெக்ஸ் Qupan, யூட் செல்வகுமனராஜா, நிமல்ராஜ் இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அனிட் டிலக்சனா, விதுஷணா, துவாரகன், சார்லஸ், மேரி அனெக்ஸ்டா, பிரின்ஸ், நிதுஷா, ஹீதுஷா, டவி, சாரா ஆகியோரின் அன்பு மாமாவும் Qudzen, Suztan, Jaztan, Indila, Ansylla, Prinsylla ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2021) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருமன்காடு,
வவுனியா.

(8901)

தகவல்: குடும்பத்தினர்
தாய் - பத்திநாயகி

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 04 - 1947

மறைவு 04 - 12 - 2019

அமரர்

### கண்மணியம்மா கணபதிப்பிள்ளை

தமிழின் அமுதம்
அம்மா எனும் மூன்றெழுத்துப்போல்
எமது குடும்பத்தின்
அமுதமும் அத்திபாரமும் நீங்கள் தானே
உங்களை இழந்ததனால்
மண்ணில் இருந்து எகிறி
கல் மீது வீழ்ந்த மண்புழுபோல்
துடியாய்த் துடிக்கின்றோம்
எமைத் தாங்க ஓடோடி வருவீரா?
ஈர் பன்னிரு மாதங்கள் என்ன
ஈர் ஏழு யுகம் ஆனாலும்
உமக்காகக் காத்திருப்போம்
உங்கள் நீங்கா நினைவுடன்...

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(8890)

உங்கள் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.